சிந்தனை
தொகுதி VI
இதழ் I & II, 1994

# சைவசித்தாந்த ஒழுக்கவியல் தேவிகாலோத்திர ஆகமப் போதனைகள்

கலாநிதி சோ. கிருஷ்ணராஜா

## முன்னுரை

சைவசித்தாந்த மெய்யியற் சிந்தனையில்-குறிப்பாக ஒழுக்கவியல் தொடர்பான சிந்தனையில், தேவிகாலோத்திரம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஞானத்தைப் பெறுவதால் மட்டுமே ஆன்மா முத்தியடையும் எனக் கூறும் ஆகம நூல்களில் வாதுளாகமத்தின் பேதமான இவ்வாகமமும ஒன்று. உயிரின் விடுதலைக்கான அறிவு பற்றியும், அவ்வறிவைப் பெறுவதற்கான ஒழுக்க நடைமுறைகள் பற்றியும் இதிற் கூறப்படுகிறது.

தேவி, காலம், உத்தரம் என்ற மூன்று சொற்கள் கொண்ட தொடர் மொழியால் இவ்வாகமத்தின் பெயர் ஆக்கப்பட்டுள்ளது. காலம், உத்தரம் என்ற இரு சொற்களும் புணர்த்தப்பட்டு காலோத்தரம் என்றும், உமாதேவியாருக்குப் போதிக்கப்பட்டமையால் தேவி என்ற பெயரையும் பெற்று ''தேவிகாலோத்திரம்'' என அழைக்கப்படலாயிற்று. இந்நூல் ஞானம், ஞானசாரம் என்ற இருபிரிவுகளைக் கொண்டது. ஞானம் என்பது உண்மையறிவு எனவும், ஞானசாரமென்பது அவ்வறிவை அடைவதற்குரிய ஆசாரம் எனவும் பொருள் தரும்.

''உத்தம குணத்தாய் ஞான மெழுங்கெது
மிரண்டினாலே
மொய்த்தவர் முத்தியெய்தும் விதியினை
விரித்துரைப்பன்''[1]

உண்மையறிவான ஞானமும், அதற்குரிய ஒழுக்க முறமையுமே இவ்வாகமத்தின் பிரதான போதனைப் பொருளென இச் செய்யுள் தெரிவிக்கிறது.

ஒழுக்கவியற் கருத்துக்களைப் போதிக்கும் முதனூலென்ற வகையிற் சைவசித்தாந்த சாஸ்திர நூல்களில் தேவிகாலோத்தரம் குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுடையது. உமாபதி சிவாசாரியார் தனது சதரத்ன சங்கிரகத்தில் இவ்வாகமத்தின் சுலோகமொன்றையும் உள்ளடக்கியிருப்பது மேற்படி கருத்தை அரண் செய்யும்.[2]

## காலோத்தர ஆகமமும் தேவிகாலோத்தரமும்

சைவசித்தாந்த மெய்யியற் கூடத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் இருபத்தியெட்டு ஆகமங்களில் வாதுளாகமமும் ஒன்று. இவ்வாகமத்தின் பேதங்களாக வாதுளம், உத்தரவாதுளம், காலாக்ஞானம், ப்ரரோகிதம், சர்வம், தர்மாத்மகம், சிரேட்டம், நித்தியம், சுத்தம், மகாநனம், விசுவம், விசுவாதமதம் என பன்னிரண்டு உபா

கமங்கள் உளவென சைவபூஷணம் என்ற நூல் குறிப்பிடுகிறது.[3] இப்பன்னிரண்டு உபாகமங்களிலும் காலோத்தரம் என்ற பெயர் காணப்படவில்லை. இதற்குப் பதிலாக காலாக்ஞானம் என்ற பெயரே காணப்படுகிறது. ஆனால் காலோத்தர ஆகமத்தின் சுவடிகளில் சில சந்தர்ப்பங்களில் காலாக்ஞானம் எனவும், வேறுசில சந்தர்ப்பங்களில் காலோத்தரம் என்றும் குறிப்பிடப்படுவதிலிருந்து இவ்விரு சொற்பிரயோகங்களும் ஒன்றையே சுட்டி நிற்கின்றனவென ஊகிக்கலாம். காலோத்தரம் என்பது காலத்தைக் கடந்து நிற்பது என்ற அர்த்தத்தையும், காலாக்ஞானம் காலத்தைக் கடந்த மெய்யறிவு என்ற அர்த்தத்தையும் கொண்டது. இதுவரை அறியப்பட்ட தரவுகளிலிருந்து பதின்மூன்று காலோத்தராகம பேதங்கள் இருந்ததாகத் தெரியவருகிறது.[4] அவற்றின் பெயர்கள் பின்வருமாறு.

1. காலோத்தரம்

2. பிருஹத் காலோத்தரம்

3. அயுத்த்ரய சம்ஹிதா காலோத்தரம் அல்லது த்ருயயுதகிரந்த சம்ஹிதா காலோத்தரம்

4. தேவீகாலோத்தரம் அல்லது சதுர்விம்சதிஸகஸ்ர காலோத்தரம்

5. துவாதச சகஸ்ர சம்ஹிதா காலோத்தரம்

6. ஷட்சகஸ்ர சம்ஹிதா காலோத்தரம்

7. த்ரயோகசதிகாலோத்தரம்

8. ஸப்தசதிக காலோத்தரம்

9. சதுசதிக காலோத்தரம்

10. ஸார்தாத்திரிசதி காலோத்தரம்

11. திரிசதிக காலோத்தரம்

12. துவிசதிக காலோத்தரம்

13. ஸ்கந்த காலோத்தரம்

இவற்றில் 1,2,7,8,10,12 இலக்கங்களுடைய காலோத்தர ஆகம பேதங்களும், 3,4,5, இலக்கங்களுடைய காலோத்தர ஆகமத்தின் ஒருசில படலங்களுமே இதுவரை கிடைக்கப்பெற்றுள்ளது. ஸாத்தாத்திரிசதிகாலோத்தர உரையாசிரியரான ராமகண்டர் தனது உரையில் மேற்கோளாகக் குறிப்பிட்ட இரு சுலோகங்களிலிருந்து சதுசதி காலோத்தரம் பற்றி அறியக் கூடியதாயுள்ளது. காத்திகேயருக்கும் சிவனுக்குமிடையிலான உரையாடலாகவே தேவிகாலோத்தரம் தவிர்ந்த ஏனைய காலோத்தர பிரதிபேதங்கள் காணப்படுகின்றன. ஆனால் தேவிகாலோத்தரம் மட்டும் சிவன் பார்வதி உரையாடலாகக் காணப்படுகிறது.

ரௌரவ ஆகமத்தின் உபாகமமான காலக்னமும், புரோத்கீதா ஆகமத்தின் உபாகமமான ஸ்ரீ காலாஞானமும் வாதுளாகமத்தின் சுருக்கங்களேயென்று உரையாசிரியர்கள் சிலர் கருதுவதால் காலக்னமும், ஸ்ரீ காலாஞானமும் காலோத்தர ஆகமத்தையே குறிப்பிடுவதென எண்ணுதல் ஆகாது. வாதுளாகமத்தின் பேதமான காலக்ஞானம் அல்லது காலோத்தரம் மேற்கூறிய இவ்விரண்டிலிருந்தும் வேறுபட்டது. ''ஸார்த்தாத்திரிசதிகாலோத்தரம்'' (350 சுலோகங்களைக் கொண்டது) 'ராமகண்ட பட்டருடைய (கி. பி. 1100 — 1130) உரையுடன் பாண்டிச்சேரியிலமைந்துள்ள பிரேஞ்சு நிறுவன வெளியீடாக வந்துள்ளது.[5] இந்நூல் த்ரயோதசதிகாலோத்தரத்தின் (1300 சுலோகங்களைக் கொண்டது) சுருக்கமாகும்.

காலோத்தரத்தின் பிறிதொரு பேதமான துவிசதிகாலோத்தரராகமத்திற்கு (200 சுலோகங்களைக் கொண்டது) அகோ

ரசிவாசாரியாரின் உரையொன்றும் உளது. அகோரசிவாசாரியாரின் துவிசதிகாலோத்தரம் நானூறு சுலோகங்களைக் கொண்ட சதுசதிககாலோத்தரராகமத்தின் சுருக்கமாகும். இவ்விடத்து சோமசம்பு பத்ததியின் உரையாசிரியரான திரிலோசனசிவர் தரும் சுவையானதொரு தகவல் உண்டு.[6] அதாவது முதனூலான காலோத்தர ஆகமத்தின் பேதமான ஸார்தாத்திரிசதியும் துவிசதிகாலோத்தரமும் இருவேறு மரபுசார்ந்த சிந்தனாகூடத்தைச் சார்ந்தவை என்ற குறிப்பு. சோமசம்பு சிவாசாரியாரின் பத்ததி துவிசதிகாலோத்தர ஆகம மரபையும், அகோர சிவாசாரியாரின் பத்ததி ஸார்தாத்திரிசதிகாலோத்தர மரபையும் பின்பற்றுவனவாகும். அகோர சிவாசாரியார் துவிசதிகாலோத்தரத்திற்கோர் உரை விளக்கம் தந்த பொழுதும் அவ்விளக்கம் ஸார்தாத்திரிசதிகாலோத்தர ஆகமபேதத்தின்படியே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சிவஞானசுவாமிகள் தமது சிவஞான பாடியத்தில் அகோரசிவாசாரியாரின் பத்ததியைக் கண்டித்தும், சோமசம்பு சிவாசாரியாரின் சோமசம்பு பத்ததியே சைவ சித்தாந்தத்திற்கு உடன்பாடானதென்று குறிப்பிடுவதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.[7]

தேவிகாலோத்தரம் என அழைக்கப்படும் காலோத்தராகமபேதத்திற்கு சதுர்விம்சதிஸகஸ்ரகாலோத்தரம் (24,000 சுலோகங்களைக் கொண்டது) என்ற பெயரும் உண்டு. கிரியாக்கிரமஜியோதி, ஞானரத்நாவலி ஆகிய நூல்களில் இவ்வாகம சுலோகங்கள் மேற்கோளாகத் தரப்பட்டுள்ளன. சதுர்விம்சதிஸகஸ்ர காலோத்திரத்தின் ஞானகண்டத்தின் அறுபத்தைந்தாம் படலத்தில் உள்ளவை மட்டுமே இன்று தேவிகாலோத்தர ஆகமம் என்ற பெயரில் கிடைக்கக் கூடியதாயிருக்கிறது. 1901 ஆம் ஆண்டு மாராட்டி மொழியில் இவ்வாகமம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. கர்நாடக மொழியில் நிரஞ்சனசித்தநஞ்சனா என்பவரால் இவ்வாகமத்திற்கு உலரவிளக்கமொன்று எழுதப்பட்டதென்ற தகவல் உண்டு.[8] தேவிகாலோத்தர ஆகமத்தின் வடமொழி மூலத்தைக் கிரந்தத்தில் முதன் முதலில் அச்சிட்டு வெளியிட்டவர் ஆறுமுக நாவலரின் மருமகனான த. கைலாய பிள்ளையாவர்

தேவிகாலோத்தரம் நீண்டகாலத்திற்கு முன்பே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு விட்டதென்றும், பாடியவர் பெயர் தெரியவில்லையென்றும் இவ்வாகமத்தின் தமிழ் மொழிப் பதிப்பாசிரியரான முத்தையா பிள்ளை குறிப்பிடுகிறார்.[9] இவரது பதிப்பில் வெளிவந்த தேவிகாலோத்தர ஆகமம் ஞானம், ஞானாசாரம் என்ற இரண்டு இயல்களை உடையதாய், 69 செய்யுள்களாலானது. இது தவிர ரமண மகரிஷியின் 85 செய்யுள்களைக் கொண்ட தேவிகாலோத்தர தமிழ்மொழிப்பெயர்ப்பொன்றும் உளது.[10] ரமணரது மொழிப்பெயர்ப்பின் அவதாரிகையில் வடமொழி தேவிகாலோத்தரத்தின் ஞானசார விசாரப்படலமே இங்கு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதென்ற குறிப்பு உண்டு. சிவாக்கிரயோகிகள் வடமொழி தேவிகாலோத்தரத்திற்கு தமிழுரையொன்று செய்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.[11]

சர்வஞ்ஞானோத்தர ஆகமத்தின் தமிழ் மொழிபெயர்ப்பின் பதிப்பாசிரியரான முத்தையபிள்ளை, அதில் வருகிற காப்புச் செய்யுளும், தனக்கு பதிப்பதற்குக் கிடைத்த தேவிகாலோத்தரத்தில் வருகிற காப்புச்செய்யுளும் ஒன்றேயாதலால் இவ்விரு ஆகமங்களையும் மொழிபெயர்த்தவர் ஒருவராயிருக்கலாமெனக் கருதுகிறார்.[12] எனினும் இவ்விரு ஆகமங்களின் தமிழ் மொழிபெயர்ப்புகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது சர்வஞ்ஞானோத்தர செய்யுட்களில் பெரும்பாலும் வடமொழிக் கலப்பிருப்பதையும், தேவிகாலோத்தர செய்யுட்களோவெனில் சீரான தமிழ் நடையிலிருப்பதையும் அவதானிக்

கலாம். நடைவேறுபாட்டைக் கருத்திற் கொள்ளின் இவ்விரு ஆகமங்களையும் தமிழில் மொழிபெயர்த்தவர் ஒருவராயிருத்தல் முடியாது.

ஒழுக்கவியற் கருத்துக்கள்

சிவாகமங்கள் கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நாற்பாதங்களையும் ஒழுக்கவியல் நோக்கில் நால்வகை சமய ஒழுக்கநெறிகளாக எடுத்துக் காட்டலாம். இவற்றில் சரியையும், கிரியையும் காமமார்க்கமாகும். விதிக்கப்பட்ட சமய நடைமுறைகளைப் பின்பற்றி ஒழுகுவதென்பதே இதன் தாற்பரியமாகும். சமய நடைமுறைகளை முதன்மைப்படுத்தாது மெய்யறிவினடிப்படையில் ஒழுகுவது ஞானமார்க்கமாகும். சமய இலக்குகளை அடைவதற்குரிய வழிமுறைகளாக இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம் முதலிய எட்டு படிமுறைகளினூடாக யோகத்தில் நிற்றல் யோக மார்க்கத்திலடங்கும். இவை தவிர திருஞானசம்பந்தர் முதலாகிய சைவ நாயன்மார்களால் கைக்கொள்ளப்பட்ட பக்திமார்க்கமும். சைவமரபினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதொரு சமய ஒழுக்க முறையாகும். தனிமனிதரது பிரத்தியேகமான நேரடி ஈடுபாடே பக்திமார்க்கத்திற்கு அடிப்படையானது. ஆனால் ஆகமங்களைப் பொறுத்தவரையில் கர்மமார்க்கம் யோகமார்க்கம், ஞானமார்க்கம் என்ற மூன்று வழிமுறைகளுமே பிரதான ஒழுக்க நெறிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

கர்மமார்க்கமும் யோகமார்க்கமும்ஞான மார்க்கத்தினளவு முக்கியத்துவ முடையதாக மூலாகமங்களில் காணப்பட்டாலும், உண்மையென்றும் சிறப்பென்றும் சைவசித்தாந்திகளால் போற்றப்படும் சர்வஞ்ஞானோத்தரம். தேவிகாலோத்தரம் முதலிய ஆகமங்களில் ஞானமார்க்கமே விதந்தோதப்படுகிறது. மெய்யறிவைப் பெறுதலே ஆன்மவிடுதலைக்கு (முத்திக்கு) இன்றியமையாததென்பது இவ்வாகமங்களில் பிரதான போதனைப் பொருளாக இருக்கிறது. சமய நடைமுறைகளை வற்புறுத்துகிற கர்மமார்க்கமும், யோகமார்க்கமும், ஆன்மவிடுதலைக்கான பொருத்தமான வழிமுறைகள் அல்லவெனவும், பயனற்றவையெனவும் கூறப்படுகிறது.

''மந்திரஞ் செபந்தியானம் பூசனைவணக்கம்
வேண்டா
அந்தமில்லா முத்திக் குபாயமே யறிய
வேண்டும்'' 13

எனக் குறிப்பிடுவதன் மூலம் கர்மமார்க்கத்தையும் யோகமார்க்கத்தையும் முத்தியடைவதற்குரிய பொருத்தமான ஒழுக்க முறையல்லவென எடுத்துக் கூறும் தேவிகாலோத்தரம்.

''பெத்தமற ஞானத்தாற் காட்சிபெறிற்
சாந்தியுடைச்
சித்தனாய்ப் பொருட்பற்றுத் தீர்ந்துவி
டடையுமால்'' 14

என ஆன்மவிடுதலைக்கு அல்லது முத்திக்கு ஞானமார்க்கமே சரியான வழிமுறையாகுமெனக் குறிப்பிடுகிறது.

ஆன்ம விடுதலையும் அதனோடு தொடர்புடைய ஞானமார்க்கமும் கிரியைகளை முதன்மைப்படுத்தும் வேதமரபிற்கு எதிராக வளர்ச்சிபெற்று வந்ததொரு ஒழுக்கவியற் சிந்தனையாகும். ஞானமார்க்கம் ஆன்மாக்களின் இறுதி இலட்சியத்தை அடைவிக்கும் வழிமுறையாக சைவமரபினாலும் போற்றப்படுகிறது. ஆனால் வேதமரபினால் விதந்து போற்றப்படும் கிரியைசார் ஒழுக்கமோ நற்பலாபலன்களை எதிர்பார்த்து குறிப்பாக வளமான இவ்வுலக வாழ்க்கைக்கான மார்க்கமாகவே பரிந்துரைக்கப்பட்டது.

ஆன்ம விடுதலைக்கு வேதங்களில் கூறப்பட்டுள்ள வேள்விக்கிரியைகள் எந்த வகையிலும் உதவுவனவல்லவென்ற குறிப்பு உப

நிடதங்களிலும் காணப்படுகின்றன. சாங்கிய தரிசனமும் இதனைக் கண்டிக்கிறது. சாங்கியரின் அபிப்பிராயப்படி பௌதீக வதீத உண்மைகள் பற்றிய அறிவே மனிதரை மறுபிறப்பாகிய பந்தத்திலிருந்து விடுவிக்கும். ஆன்மவிடுதலைக்கான இம்முயற்சி ''நிவிர்த்தி மார்க்கம்'' என அழைக்கப்படும். நிவிர்த்தி மார்க்கம் வேதங்களினாலும் தர்மசாஸ்திரங்களினாலும் போதிக்கப்படும் ''பிரவிர்த்தி'' மார்க்கத்திற்கு முற்றிலும் எதிரானது. புற உலகு பற்றிய உளச்சாய்வு அல்லது புலன்களதும் உளத்தினதும் விடய நாட்டம் பிரவிர்த்தி எனப்படும். வேதங்களினாலும் தர்மசாஸ்திரங்களினாலும் முன்மொழியப்பட்ட பிரவிர்த்தி மார்க்கம் இவ்வுலக வாழ்க்கையை முதன்மைப்படுத்தி அவ்வாழ்க்கையில் அனைத்து நற்பேறுகளையும் பெறுவதை இலக்காகக் கொண்டது. ஆனால் மோட்சம் அல்லது ஆன்மவிடுதலை என்ற ஒழுக்கக்கருத்தோ கடந்தநிலையான உண்மை பற்றிப் பேசுகிறது. மனித உளத்தை புறப்பொருட்களிடம் நாட்டமடையச் செய்வதாக பிரவிர்த்தி மார்க்கம் உளது. வேதங்களும் தர்மசாஸ்திரங்களும் போதிக்கும் தருமம், நற்பேறு, இன்பம் (காமம்) போன்ற விழுமியங்கள் பிரவிர்த்தி மார்க்கத்திற்குரியனவாகக் காணப்படுகின்றன. ஆனால் ஆன்ம விடுதலையைச் சுட்டும் ஞானமார்க்கமோ (நிவிர்த்தி மார்க்கம்) புறப் பொருட்களுடனான தொடர்பை மனம் முற்றிலும் விலக்கிக் கொள்ள வேண்டுமென வற்புறுத்துகிறது. அகநிலைப்பட்ட முறையில் ஆன்மாவின் உண்மையியல்பைக் கண்டறிந்து கொள்ள வேண்டுமெனவும் வற்புறுத்துகிறது. நிவிர்த்தி மார்க்கத்தை வற்புறுத்தும் ஒழுக்கக் கொள்கையினரில் சாங்கியர் முதன்மை ஸ்தானத்தைப் பெறுகின்றனர்.

பிரவிர்த்தி மார்க்கம் ஆன்ம விடுதலையைத் தராதென தேவிகாலோத்தரமும் குறிப்பிடுகிறது. மனமானது புறத்தேயுள்ள விடயங்களில் செல்லாது கருத்தடங்கி தன்னிடத்தே நிற்றல் வேண்டுமெனவும், அவ்வாறு நிற்றலே முத்திக்கு வழியாகுமெனவும் அது கூறுகிறது.[15]

''கருத்தடங்கின் முத்தியது கையகலிற் கட்டாகும்
விரித்த பொருளிதுவென்ன வறிவுடைய மேதக்கோர்
திருத்தகுநல் லறிவாலே சித்தத்தைத் திறம்பாமல்
அருந்தியுட னிலைநிறுத்து மஃதறிவின் பயனாமால்''

துன்பமே பிறவிக்குக் காரணமென்று பின்வரும் செய்யுள் குறிப்பிடுகிறது.[16]

யாவ ராயின மெப்பிறப் பெய்திலும்
ஆவ தாவ தருக்துய ராதலால்
தீய துன்பஞ் செலுத்தற் பொருட்டந்தத்
தூய ஞானச் சுடரைத் தொடர்வரே

எவராயினும் எப்பிறப்பு எய்தினாலும் அடைவது துன்பமே. எனவே துன்பத்திலிருந்து விடுபடுதற் பொருட்டு மெய்யறிவின்படி ஒழுகுதல் வேண்டுமென்பது இச்செய்யுளின் தாற்பரியம். பிறப்பு துன்பத்திற்கேதுவானதென்ற கருத்து சாங்கிய தரிசனத்திலிருந்து சைவசித்தாந்திகளாற் பெறப்பட்ட கருத்துக்களில் ஒன்றாகவிருக்கலாம்.[17] ஒவ்வொரு ஆன்மாக்களும் விடுதலையடைய வேண்டுமென்பது சாங்கியத்தின் நிலைப்பாடாகும்.

பிறவியாகிய துன்பத்திலிருந்து விடுபட மனதையடக்குதல் வேண்டும். மனமானது ஓரிடத்தில் நிலைத்து நிற்பதல்ல. அது குரங்கு போல ஒன்றைவிட்டொன்றைப் பற்றி அலைந்து திரியும்.[18]

மருவிய பொருண்மே லன்பாய் வானரம் போற்சரித்துத்
திரியுமச் சித்தந் தன்னைத் திருத்திச் சூனியத்தே நின்றால்
மருவினோர் பிரிதலின்றி வானவ ரறிவுக் கெட்டாப்
பொருவிலா நித்தசுத்தப் பொருவினை யடைவரன்றே

என மனத்தின் இயல்பையும் அதனை அலையவிடாது ஓரிடத்தில் நிலைநிறுத்துதலும் ஆன்ம விடுதலைக்கு இன்றியமையாததெனக் தேவிகாலோத்தரம் குறிப்பிடுகிறது. மனம் ஓரிடத்தில் நிலைபெற வேண்டுமாயின் தேகப்பற்றும், போகப்பற்றும் அகலுதல் வேண்டும். போகப்பற்று பலவிதமான அவஸ்தைகளிற்குக் காரணமாகிறது. அவஸ்தை பிறவிக்கேதுவாகிறது. எனவே மனதை நிலைபெறச் செய்து காப்பவரே நல்ல தவத்தையுடையவராவர்.

''பற்றினாற் சலிக்குமுள்ளம் பற்றாதே
பண்ணிக்கொள்க
நிற்றலின் றெனினுந்தந்த நிலையினில்
நிறுத்திக்கொண்டால்
பெற்றன மென்று பேணிப் பின்னைப்
பேராமற் காக்கும்
நற்றவ ரன்னியநிக
வுலகினில்லோரியாரே''

என்பது தேவிகாலோத்தரச் செய்யுள்.[19]

ஆன்மவிடுதலையாகிய முத்திநெறிக்குரிய உபாயம் மனவடக்கமே என்று கூறுவதன் மூலம் புலனடக்கத்தை ஒழுக்க நடத்தைக்கான முற்கற்பிதமாக தேவிகாலோத்திரம் எடுத்துக்காட்டுகிறது.[20] புலனடக்கம் பந்தங்களிலிருந்து விடுதலையடையச் செய்கிறது. இவ்விடுதலை பிறப்பிறப்பிலிருந்து ஆன்மாவை விடுதலை செய்கிறது. இவ்வாறு சைவசித்தாந்தம் கூறும் ஆன்மவிடுதலைக் கோட்பாடு சாங்கியம், நியாய வைசேடிகம் ஆகிய தரிசனங்களது ஆன்ம விடுதலைக்கோட்பாட்டை ஒத்திருப்பதுபோலத் தோன்றுகிறது. எனினும் சைவசித்தாந்த நிலைப்பாட்டிற்கும் சாங்கியம், நியாய வைசேடிகம் ஆகியனவற்றின் நிலைப்பாட்டிற்குமிடையில் அடிப்படையானதொரு வேறுபாடுண்டு. சாங்கியத்தின்படி விடுதலையடைந்த ஆன்மா இலைபினிட்சுவின் ''மொனாடுகள்'' போன்றிருக்கும். அது பிறப்பிறப்பாகிய பந்தத்திலிருந்தும் விடுபட்ட ''கைவல்ய'' நிலையாகும். ''சரீர சம்பந்தமில்லாது ஆத்யாதமிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிதம் என்ற மூன்று விதமான துக்கங்களற்ற நிலையை புருஷன் அடைவதே மோட்சம் அல்லது கைவல்யம்'' என சாங்கிய தத்துவ கௌமுதி மோட்சத்தை விளக்குகிறது.[21] நியாயவைசேடிகம் ஏற்றுக்கொள்கிற ஆன்ம விடுதலையும் சாங்கியர் கூறுகிற கைவல்ய நிலையை ஒத்ததாக இருப்பினும் ஆன்மா மோட்சத்தில் நிர்க்குணனாக இருக்கிறானென்பது இவர்களது நிலைப்பாடாகும்.

ஆனால் சைவசித்தாந்தமோ பிறப்பிறப்புக்களை எக்காலத்துக்குமாய்த் துறந்து சிவனோடு இரண்டறக்கலத்தலே ஆன்ம விடுதலை என்பதன் தாற்பரியமெனக் கருதுகிறது. சிவனைப் பற்றி நிற்பவனே சிவயோகி என்றும், தூல சூக்கும சரீரங்களைத் தனக்கு வேறாக அறிந்தவனுக்கு சிவஞானம் விளக்கித் தோன்றுமெனவும் சைவசித்தாந்தம் ஏற்றுக்கொள்கிறது.

சிவனே தானென்று உணர்வதாகிய சிவஞானத்தினால் ஆன்மவிடுதலையான பரமுத்திப்பேறு ஆன்மாக்களிற்குக் கிடைக்குமென தேவிகாலோத்தரம் குறிப்பிடுகிறது.(22)

''நித்தனாம் பரமேசன் யாரென்று
நிச்சயிக்கின்
முத்தனல வெனினுமவன் முத்தனா
முயிருடம்பின்
பெத்தமற ஞானத்தாற் காட்சிபெறிற்
சாந்தியுடையச்
சித்தனாய்ப் பொருட்பற்றுத் தீர்ந்துவீ
டடையுமால்''

இவ்வாறு நிவிர்த்தி மார்க்கத்தால் ஆன்ம விடுதலையைப் பெறும் உயிரானது அந்த கைய விடுதலையை அடைவதற்கான ஒழுக்கநெறி யாதென்ற வினாவிற்கு இவ்வாகமத்தின் ஞானாசாரவியல் விடை தருகிறது. இதன்படி பரமுத்தியடைவதற்கான ஞானத்தைத் தவிர பசுஞானமோ பாசஞானமோ அல்லது சிவபூசையோ வேள்

வியோ அல்லது இவற்றிற்கு அங்கமான கிரியைகளோ தேவைப்படுவதில்லை. நியமம் முதலிய சரியைகளும் விரத ஒழுக்கமும் வேண்டப்படுவதில்லை. நிவிர்த்தி மார்க்கத்தில் ஈடுபடுபவன் உலகசம்பந்தமான செயல்களனைத்தையும் செய்யாது விடுதலே தக்கதெனக் கூறப்படுகிறது. ஆசையை அடக்குதல் வேண்டும்.(22) உயிர்களிடத்து அன்புடையவனாயிருத்தல் வேண்டும்.(23) மந்திர தந்திரங்களை விரும்புதல் ஆகாது.24 விருப்புவெறுப்பின்றி சமநிலையில் நிற்றல் வேண்டும்.(25)

''ஆசையினை யறவிட்டெப் பொருட்கு
மொத்துச் சுகதுக்கம்
பேசியநட் டார்பகைஞர் பீடுடையோர்
பீடில்லோர்
மாசிலொளி வளருமணி காஞ்சனங் கல்
லேட்டினிலும்
நேசமறப் பார்த்துணர்ந்து சமநிலத்தே
நிலை நிற்பான்''

என சமநிலையாளுமை உடையவனாயிருத்தல் வேண்டுமென இவ்வாகமம் கூறுகிறது. இதனால் உலகத்துப் பொருட்களிடத்து அச்சமோ அல்லது அதிசயமோ ஞானசாதகனுக்கு இல்லாது போய்விடுகிறது. வாதம் செய்தலும், பயனில்லாத சொற்களைச் சொல்லுதலும், பிறருடன் விரோதமாயிருத்தலும் இல்லாதிருக்கும். விதிக்கப்பட்டவையும் விலக்கப்பட்டவையும் பற்றிய நூல்களை ஓதுதலிலிருந்தும் விடுபட்டு, நன்மை தீமையென்று சொல்லப்பட்ட கன்மம் அனைத்தையும் ஒருசேர விட்டிருப்பான். இவ்வாறு நிவிர்த்தி மார்க்கத்திலிடுபட்டவனது ஒழுக்கவியல் பற்றி தேவிகாலோத்தரம் விளக்குகிறது.27

''வாதுரைபயனில் சொல்லும் பிறருடன்
பகிழ்ந்திருத்தல்
பேதுறு பிணக்குநீங்கிப் பெரியவ னருளி
னாலே
ஓதுநூ லோதலோவி யுலகினினன்று
தீதென்
றாதியி லுரைத்த வெல்லா மறவிட்டே
யமர்ந்திருப்பான்''

பிறிதொரு செய்யுள்மூலம் ஆசை, கோபம், பயம், சோகம், பொறாமை, ஆற்றாமை பிறருக்கு நிங்குபயக்கும்படி பேசுதல், சிறுமை என்பன இல்லாதிருத்தல் வேண்டுமெனவும் கூறுகிறது 28

''ஆசை கோபம் பயஞ்சோக ராகமாம்
மாசு மாட்சியுள் ளோதராக்க மாற்
றாமை
பேசு தீமை பிறர்க்குத் தமக்கிலாத்
தேசி முக்குடன் நீர்வார் சிறந்தவர்''

முடிவுரை

இதுவரை கூறியவற்றிலிருந்து சைவ சித்தாந்த ஒழுக்கவியல் அடிப்படையில் ஆன்மா மையவாதமாகவிருப்பதைக் காணலாம். இவ்வுலக வாழ்க்கை பாசத் தொடர்புகளைக் கொண்டது. துன்பமானது. ஒருவனது வாழ்க்கை பிறப்பிறப்புத் தொடர்பிலிருந்து விடுபடுதலையே இலக்காகக் கொண்டதால் ஒழுக்கவியலும் அதனடிப்படையிலேயே விளங்கிக் கொள்ளப்படுகிறது மிக உயர்தரத்திலுள்ள சுயகட்டுப்பாடும், தூய்மையான உள்ளமும் விடுதலைக்கான இன்றியமையா நிபந்தனைகளாக வற்புறுத்தப்படுகிறது. ஒருவன் ஆன்மிக நாட்டத்தைத் தனது சுயமுயற்சியாலேயே அடைதல் வேண்டுமென்ற இச்சிந்தனைப் போக்கு ஒழுக்கவியலில் தனியுரிமைச் செயலாற்றக் கோட்பாடாக இருப்பதுடன் ஒருவன் தன் பற்றுக்கள், மனச்சாய்வுகள் அல்லது சுயாதீனசித்தம் என்பனவற்றின் மீது ஆளுகை செய்யவேண்டுமென்ற நம்பிக்கையையும் வெளியிடுவதாக உள்ளது.

வேதங்களில் கூறப்பட்ட பிரவிர்த்தி மார்க்கம் சமய ஒழுக்கத்தையும், வர்ணாச்

சிரம தர்மம் போதிக்கும் சாதி ஒழுக்கத்தையும் வற்புறுத்துவதன் மூலம் சமுதாய ஏற்றத்தாழ்வுகளை அங்கீகரிக்கிறது. இதனாற் போலும் வேதங்களைப் பயிலுதல் முதன் மூன்று வர்ணத்தவர்க்குமேயுரியதென்ற நிலைப்பாட்டை வேதமரபு போதிக்கிறது. ஆனால் சைவசித்தாந்தத்தின் முதல் நூல்களான ஆகமங்களோ நால்வகை வர்ணத்தவர்க்கும் அவை உரியனவென்று அறுதியிட்டுக் கூறுவதன் மூலம் சாதிப்பாகுபாட்டிலமைந்த சமுதாய ஏற்றத்தாழ்வுகளைக் கண்டிக்கிறது.

இதனையாதாரமாகக் கொண்டே ஆன்மவிடுதலைக்கான ஒழுக்கம் அனைவருக்கும் ஒன்றேயென சைவசித்தாந்தம் விதிப்பதை தேவிகாலோத்தரம் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. □

### *பிற்குறிப்பு*

இக்கட்டுரையை எழுதுங்கால் காலோத்தர ஆகமத்தின் பகுதிகளை வாசித்து விளக்கிய பேராசிரியர் வி. சிவசாமி அவர்களுக்கு நன்றி.

### *அடிக்குறிப்புகள்*

1. தேவிகாலோத்தர ஆகமமும் உரையும், பதிப்பாசிரியர் பொ. முத்தையாபிள்ளை (1935), பக். 8.

2. Sataratnasangraha of Umapati Sivacarya (ed) P. Thirugnanasampandhan (1973), Madras University Press. p. 102.

3. சைவபூஷணம், வடமொழிமூலமும் தமிழ் வியாக்கியானமும், தேவகோட்டை, சிவாகம சித்தாந்த வெளியீடு, (1925), பக். 163. திருமந்திரத்தில் ஒன்பது ஆகமங்கள் பற்றிய குறிப்பொன்று காணப்படுகிறது அவற்றில் காலோத்திரமும் ஒன்று. திருமூலர் குறிப்பிடும் ஆகமங்கள் வருமாறு: காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், வியாமளம் காலோத்தரம், சுப்பிர பேதம், மகுடம்.

4. Sardhatrisatikalottaragama (ed N. R. Bhatt 1979) Institute Francais D indologie, Pondichery p. 4.

5. மேலே குறிப்பிட்ட நூல்.

6. மே. கு., பக். 8.

7. சிவஞான சுவாமிகள், சிவஞானபாடியம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (1952) பக். 25-26.

8. மே. கு. பக். 7.

9. தேவிகாலோத்திரம் மு. கு., பக். 12

10. ரமணர் நூற்றிரட்டு (இரண்டாம் பதிப்பு 1934) திருவண்ணாமலை, பக். 53-58.

11. சிவாக்கிரயோகிகள் சிவநெறிப்பிரகாசம் (முன்னுரை) திருவாவடுதுறை ஆதீனம் (1968) பக். 17.

12. தேவிகாலோத்தரம் மு. கு., முன்னுரை.

13. மே. கு., பக். 23.

14. மே. கு., பக். 61.

15. மே. கு., பக். 14.

16. மே. கு., பக். 33.

17. மே. கு., பக். 33.

18. சாங்கிய தத்துவ கௌமுதியில் வருகிற பின்வரும் சுலோகத்தை மேற்படி தேவிகாலோத்தர செய்யுளுடன் ஒப்பிட்டு, நோக்கவும். ''........லிங்க சரீரத்துடன் கூடிய புருஷன் லிங்கசரீரம் தொலையும் வரையில் ஜனனமரணங்களால் ஏற்பட்ட துக்கத்தை அடைகிறான். ஆகையால் சிருஷ்டி இயற்கையில் துக்கசாதனமாகவே இருக்கிறது. பார்க்க. ''சாங்கிய தத்துவ கௌமுதி'' பதிப்பாசிரியர் கடலங்குடி நடேச சாஸ்திரிகள் (1925) பக். 199.

19. தேவிகாலோத்தரம் மு. கு., பக். 36.

20. மே. கு., பக். 45.

21. சாங்கிய தத்துவ கௌமுதி, மு. கு., பக். 226

22. தேவிகாலோத்தரம் மு. கு. பக். 61.

23. மே. கு., பக். 81.

24. மே. கு., பக். 82.

25. மே. கு., பக். 86.

26. மே. கு., பக். 87.

27. மே. கு., பக். 91.

28. மே. கு., பக். 92.